<u>இராசிபுரம் நகராட்சி</u>

<u>நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு</u>

2023–ஆம் வருடம் ஜூன் மாதம் 30–ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 27.06.2023

தலைவர்,
நகர் மன்றம்.

<u>பொருள்கள்</u>

( 1 ) தமிழ்நாடு அரசு இரண்டாண்டு சாதனைகளில் இந்நகராட்சியில் நடைபெற்ற திட்டப் பணிகள் குறித்த விளம்பரம் செய்ததற்கான கட்டண விவரம் கீழ்க்கண்டவாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | தினகரன் நாளிதழ் | – | ரூ. 21600/– |
| 2. | தமிழ்முரசு நாளிதழ் | – | ரூ. 9500/– |
| 3. | மாலைமலர் நாளிதழ் | – | ரூ. 8900/– |
| | | | ரூ. 40000/– |

மேற்க்காணும் விவரப்படி நாளிதழ்களுக்கு விளம்பர கட்டணத் தொகை ரூ. 40000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) விளம்பரக் கட்டணம் ரூ. 40000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(2634/23/இ1)

**தீர்மானம் எண். 382**

அனுமதிக்கப்பட்டது.

( 2 ) இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகன எண். TN 28 CZ 6222–க்கான இரண்டாவது இலவச சர்வீஸ் செய்வதற்கான செலவுத் தொகை ரூ. 6530/–ஐ திரு செ. மோகன், ஓட்டுநர் அவர்களால் செலவு செய்யப்பட்டதால், மேற்படி தொகையை திரும்ப நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2514/23/இ2)

**தீர்மானம் எண். 383**

அங்கீகரிக்கப்பட்டது.

(3) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள தெரு விளக்குகளை மின் சேமிப்பு (LED) விளக்குகளாக மாற்றும் திட்டத்தின்கீழ் இராசிபுரம் நகராட்சி பகுதிகளிலுள்ள தெரு விளக்குகள் LED விளக்காக மாற்றவும், தெரு விளக்குகள் இல்லாத பகுதிகளில் புதிய தெரு விளக்குகள் LED அமைக்கவும் ரூ. 271.81 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை துவங்கும் முன் தெரு விளக்கு பொருளின் தரத்தை உறுதி செய்தல் 40 ஆற்றல் நுகர்வு சேமிப்பு ஆய்வு, சரிபார்ப்பு மற்றும் சான்றிதழ்களுக்கான மூன்றாம் தரப்பு ஆய்வுக் கட்டணம் ரூ. 187429/— நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

தெரு விளக்கு பொருட்களின் தரத்தை உறுதி செய்ய முன்றாம் தரப்பு ஆய்வுக் கட்டணம் ரூ. 187429/— நகர்மன்றத் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ1/3692/22)

**தீர்மானம் எண். 384**

அங்கீகரிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி அம்மா உணவகத்தில் சமையல் செய்ய தேவையான பாத்திரங்கள் வாங்கிக்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் (1) அலுமினிய பக்கெட் — 5 எண்ணிக்கை, (2) குப்பை பக்கெட் — 5 எண்ணிக்கை, (3) கைப்பிடி பாத்திரம் — 2 எண்ணிக்கை, (4) அலுமினிய வடசட்டி — 2 எண்ணிக்கை, (5) பிளாஸ்டிக் பக்கெட் — 2 எண்ணிக்கை ஆகியவற்றிற்கு கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | | |
|---|---|---|---|
| 1) | ஸ்ரீ வாசவி மெட்டல் மார்ட், இராசிபுரம் | — | ரூ. 6620/— |
| 2) | ஸ்ரீ பொன் காளியம்மன் மெட்டல் மார்ட், இராசிபுரம் | — | ரூ. 6000/— |
| 3) | ஸ்ரீ புவனேஸ்வரி மெட்டல் மார்ட், இராசிபுரம் | — | ரூ. 5800/— |

மேற்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண். 3, ஸ்ரீ புவனேஸ்வரி மெட்டல் மார்ட் என்பவரது குறைந்த விலைப்புள்ளியான ரூ. 5800/—ஐ ஏற்கலாம். மன்ற அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ புவனேஸ்வரி மெட்டல் மார்ட் அவர்களிடம் பாத்திரங்கள் வாங்கியதற்கும் அதற்கான செலவுத் தொகை ரூ. 5800/—ஐ வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3652/14/சி4)

**தீர்மானம் எண். 385**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குள் சரக்குந்துகள், இழுவை வண்டிகள் உள்ளிட்ட வாகனங்கள் மூலம் மலக்கசடு கழிவுநீர் சேகரித்தல், கொண்டு செல்லுதல் போன்ற பணிகளில் ஈடுபடும் எவரும் இராசிபுரம் நகராட்சியில் உரிய ஆவணங்களுடன் ரூ. 2000/— கட்டணமாக செலுத்தி உரிமம் பெற்றுக்கொள்ள தினகரன் நாளிதழில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 6900/— Kal Publication (p) Ltd., நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

**(638/23/எச்1)**

**தீர்மானம் எண். 386**

அனுமதிக்கப்பட்டது.

**( 6 )** இராசிபுரம் நகராட்சி **27** வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் Gas chlorination அமைப்பு மற்றும் அதற்க்கான அறை கட்டும் பணி ரூ. **11.50** இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் நிதிப் பணிக்கு **05.06.2022**–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | |
|---|---|
| ஐ டெக் சிஸ்டம், நேரு தெரு, ஈரோடு | – **0.05** % மதிப்பீட்டை விட குறைவு |
| சுமதி இன்பிராடேக் பில்டர்ஸ் | – **1.52** % மதிப்பீட்டை விட அதிகம் |

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஐ டெக் சிஸ்டம், நேரு தெரு, ஈரோடு ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஐ டெக் சிஸ்டம், நேரு தெரு, ஈரோடு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2353/23/இ2)**

**தீர்மானம் எண். 387**

அங்கீகரிக்கப்பட்டது.

**( 7 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் **13** வார்டுகளிலுள்ள தெரு விளக்கு பராமரிப்பு செய்ய **15.06.23** முடிய அனுமதி முடிவடைவதால் தற்போது பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சியிலுள்ள **13** வார்டுகளில் அனைத்து தெரு விளக்குகளும் பராமரிப்பு செய்து வந்த ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் அவர்களுக்கு அதே விலை விகிதத்தில் மேலும் **15** நாட்கள் **16.06.2023** முதல் **30.06.2023** முடிய நீட்டிப்பு செய்ய நகர் மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணியாணை வழங்கியமைக்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

**1)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் **13** வார்டுகளிலுள்ள தெரு விளக்கு பராமரிப்பு செய்ய **15.06.2023** முடிய அனுமதி முடிவடைவதால் ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் அவர்களுக்கு அதே விலை விகிதத்தில் மேலும் **15** நாட்கள் மட்டும் கால நீட்டிப்பு செய்து வழங்க நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(207/2019/இ2)**

**தீர்மானம் எண். 388**

அனுமதிக்கப்பட்டது.

( 8 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 26 செல்லப்பா காட்டுக்கொட்டாய் பகுதிக்கு ராம் நகர் பொது கிணற்றிலிருந்து உப்பு தண்ணீர் வசதி செய்து பணி ரூ. 2.80 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் நிதிப் பணிக்கு 08.06.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரர் | – | 0.22 % மதிப்பீட்டை விட குறைவு |
| திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் | – | 1.24 % மதிப்பீட்டை விட அதிகம் |

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1218/23/இ2)

**தீர்மானம் எண். 389**

அனுமதிக்கப்பட்டது.

( 9 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19, காட்டூர் காட்டுக்கொட்டாய் பகுதிக்கு ஆழ்துளைக் கிணற்றில் சிறு மின் விசைப்பம்பு பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் பணி ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் நிதிப் பணிக்கு 08.06.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் | – | 0.74 % மதிப்பீட்டை விட அதிகம் |
| திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் | – | 0.11 % மதிப்பீட்டை விட குறைவு |
| திரு ஆர்.எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர் | – | 0.31 % மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு ஆர்.எஸ். ரங்கசாமி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான 0.31% விலைப்புள்ளி அளித்துள்ள திரு ஆர்.எஸ். ரங்கசாமி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1484/23/இ2)

**தீர்மானம் எண். 390**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2 வள்ளலார் காட்டுக்கொட்டாய் பகுதிக்கு பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்தல் பணி ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் நிதிப் பணிக்கு 08.06.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரர் – 0.26 % மதிப்பீட்டை விட குறைவு
திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் – 2.34 % மதிப்பீட்டை விட அதிகம்

மதிப்பீட்டைவிட குறைவான 0.26 % விலைப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான 0.26 % விலைப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1409/23/இ2)

**தீர்மானம் எண். 391**

அனுமதிக்கப்பட்டது.

**( 11 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2, கோரைக்காடு பகுதியில் லைன் பூஸ்டர் அமைத்தல் பணி ரூ. 1.80 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் நிதிப் பணிக்கு 12.06.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரர் – 0.12 % மதிப்பீட்டை விட குறைவு
திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் – 1.27 % மதிப்பீட்டை விட அதிகம்

மதிப்பீட்டைவிட குறைவான 0.12% விலைப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான 0.12 % விலைப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1534/23/இ2)

**தீர்மானம் எண். 392**

அனுமதிக்கப்பட்டது.

**( 12 )** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 Z 7035 எண்ணுள்ள தெரு விளக்கு வாகனம் 08.03.1996 அன்று வாங்கப்பட்டது. 26 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் மேற்படி ஈப்பு வாகனம் 22.08.2022 வரை இயக்கப்பட்டது. எனவே, வண்டி இயக்க இயலாத நிலையிலுள்ளதால் இவ்வாகனத்தை கழிவு நீக்கம் செய்யவும் இதற்கான உரிய முன்மொழிவுகளை நகராட்சி நிருவாக ஆணையருக்கு அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2410/23/இ2)

**தீர்மானம் எண். 393**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளிலுள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளி கிணற்றிலிருந்து அன்றாட தேவைக்கு உப்பு நீர் குழாயில் ஏற்படும் கசிவுகள் மற்றும் 65 கிலோ மீட்டர் நீளத்திற்கு 5 மேல்நிலை தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மானக் குழாய் மற்றும் பிரதானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து குடிநீர் விநியோகம் சீரான முறையில் வழங்க குடிநீர் தளவாட சாமான்கள் 2023–2024–ஆம் ஆண்டிற்கு வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.80 இலட்சத்திற்கு மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(3081/23/இ2)

தீர்மானம் எண். 394

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7, வி நகர் ரோடு எண் .1 – 6–ஆவது கிராஸ் அருணாச்சலம் காடு பகுதியிலுள்ள ஆழ்துளைக் கிணறு அடி பம்பு போடப்பட்டு 6 ஆண்டுகளாக பழுதாகி உள்ளதால் அதனை அகற்றி சிறு மின்விசை பம்பு பொருத்தி சின்டெக்ஸ் டேங் அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். (2517/23/இ2)

தீர்மானம் எண். 395

அனுமதிக்கப்பட்டது.

( 15 ) இராசிபுரம் நகராட்சி ஆண்டுக் கணக்குகள் 2022–23–ஆம் ஆண்டிற்கான பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகள் இணையதளத்தில் தயார் செய்து வழங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 60,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1353/23/பி3)

தீர்மானம் எண். 396

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இந்நகராட்சி பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் கணினிப்பிரிவு நகல் மற்றும் பிரிண்ட் எடுக்கும் மூன்று இயந்திரத்திற்கு 2023–24–ஆம் ஆண்டிற்கான டோனர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

( 3046/23/பி3)

தீர்மானம் எண். 397

அனுமதிக்கப்பட்டது.

( 17 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் மக்கள் பயன்பாட்டில் இல்லாத போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ள ஆழ்துளைக் கிணறுகளிலுள்ள கைப்பம்புகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1. வார்டு எண். 23 குப்புதாசன் தெரு பொதுக்கிணறு அருகிலுள்ள கைப்பம்பு
2. வார்டு எண். 25 கோனேரிப்பட்டி EX–2
3. வார்டு எண். 24 குஞ்சு மாரியம்மன் கோவில் தெரு, அங்கன்வாடி மையம் அருகில்
4. வார்டு எண். 24 கணபதி விலாஸ் ரைஸ் மில் தெரு
5. வார்டு எண். 10 வி. நகர் ரோடு எண் .12
6. வார்டு எண். 10 வி. நகர் ரோடு எண் .17 பாப்பாத்தி காடு விநாயகர் கோவில் அருகில்

மேற்கண்ட ஆறு இடங்களில் மக்கள் பயன்பாட்டில் இல்லாத போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ள கைப்பம்புகளை அகற்ற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(2448/23/இ2)

**தீர்மானம் எண். 398**

அனுமதிக்கப்பட்டது.

( 18 ) நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அசைவ உணவு விடுதி நடத்தி வரும் திரு எஸ். பழனிசாமி என்பவர் தற்சமயம் உள்ள நுழைவுவாயிலுடன் கூடுதலாக மேற்குப் பார்த்த நுழைவுவாயில் அமைத்துக் கொள்வதாகவும், கடையை மீண்டும் நகராட்சிக்கு ஒப்படைக்கும்பொழுது பழைய நிலையிலேயே திரும்ப ஒப்படைப்பதாகவும் உறுதி அளித்து கடிதம் வழங்கியுள்ளார். எனவே, கூடுதலாக மேற்குப்பார்த்த நுழைவுவாயில் அமைத்துக் கொள்ள நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(3155/23/இ1)

**தீர்மானம் எண். 399**

அனுமதிக்கப்பட்டது.

( 19 ) இராசிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள பொருட்கள் பாதுகாப்பு அறை குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் திருமதி நீலாம்பாள், 13/47, பழனி சந்து என்பவர் தற்சமயம் பொருட்கள் பாதுகாப்பு அறையிலுள்ள கதவினை நீக்கிவிட்டு ஷட்டர் வைத்துக் கொள்வதாகவும், கடையை திரும்ப நகராட்சிக்கு ஒப்படைக்கும்பொழுது பழைய நிலையில் இருந்தபடியே ஒப்படைப்பதாகவும் உறுதி அளித்து கடிதம் வழங்கியுள்ளார். எனவே, புதியதாக ஷட்டர் கதவு வைக்க நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(3154/23/இ1)

**தீர்மானம் எண். 400**

அனுமதிக்கப்பட்டது.

**( 20 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் Chlorination செய்து சுத்தமான குடிநீராக தருவது அவசியமாகிறது. இதற்காக புதியதாக Gas Chlorination அமைக்கப்பட்டுள்ளது. இதனை இயக்க மாதாமாதம் குறையும் Gas Cylinder–ஐ Refilling செய்வது அவசியமாகிறது. மேற்க்கண்டப் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. **1.20** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**( 3168/23/இ2)**

**தீர்மானம் எண். 401**

அனுமதிக்கப்பட்டது.

**( 21 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் தற்பொழுது குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது. மேற்படி குடிநீர், அளவு சரியாக வருகிறதா என பார்க்க நகராட்சி வசம் Flow Meter எதுவும் இல்லாததால், வரும் குடிநீரின் அளவு தெரியாமலுள்ளது. எனவே, குடிநீர் வரும் வழியில் Flow Meter நகராட்சி சார்பாக ஒன்று அமைத்து, குடிநீர் வரும் அளவினை கண்காணிப்பது அவசியமாகிறது. மேற்ப்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. **5.40** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3167/23/இ2)**

**தீர்மானம் எண். 402**

அனுமதிக்கப்பட்டது.

( 22 ) முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின்கீழ், இராசிபுரம் நகராட்சிப்8 பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணி ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்க்கொள்ள **18.05.2023–**இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

*1)* ஆச்சி ரெஸ்டாரண்ட் – ரூ .**12.50** ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு குறைவு
*2)* ராமலிங்கம் ஹோட்டல் – ரூ .**14.50** ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு அதிகம்

மேற்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ. **12.50** ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஆச்சி ரெஸ்டாரண்ட் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ. **12.50** ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஆச்சி ரெஸ்டாரண்ட் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(1191/23/இ1)**

**தீர்மானம் எண். 403**

அனுமதிக்கப்பட்டது.

(23) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான அனைத்து நகராட்சிப் பள்ளிகளிலும் உள்ள RO Plant வைத்து பல ஆண்டுகளான நிலையில், மாணவர்களின் நலன் கருதி சுத்தமான குடிநீர் வழங்குவது அவசியமாகிறது. மேலும், தற்பொழுது முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் பயன்பாட்டிற்கு வரயிருப்பதால் மேற்க்காணும் RO Plant–இல் உள்ள பழுதுகளை சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் தொடர்ந்து பராமரிக்கவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 3.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3177/23/இ1)

**தீர்மானம் எண். 404**

அனுமதிக்கப்பட்டது.

(24) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான TN 28 BZ 9021 குடிநீர் லாரியில் தற்பொழுதுள்ள குடிநீர் டேங்க் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் மேற்படி டேங்க்–ஐ எடுத்துவிட்டு புதியதாக டேங்க் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 4.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(3179/23/இ2)

**தீர்மானம் எண். 405**

அனுமதிக்கப்பட்டது.

(25) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் தற்பொழுது பெயிண்ட் அடித்தல், காம்பவுண்ட் அமைத்தல் மற்றும் பள்ளிக்குத் தேவையான கணினிகள் மற்றும் UPS-கள் வாங்குதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.40 இலட்சத்திற்கு நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்ப்படி பணிக்கான செலவுகளை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3178/23/இ1)

**தீர்மானம் எண். 406**

அனுமதிக்கப்பட்டது.

(26) நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் தட்டில் முறுக்கு விற்பனை வசூல் செய்யும் சுங்கம் குத்தகை உரிமத்திற்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை திரு கார்த்திகேயன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 01.04.2021 முதல் 31.03.2024 வரையுள்ள காலத்திற்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்துக் கொள்ள 10.02.2023 மற்றும் 28.03.2023 அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் பேருந்து நிலையத்தில் தட்டில் முறுக்கு வியாபாரிகள் யாரும் வியாபாரம் செய்யாததால் மேற்ப்படி பேருந்து நிலையத்திற்க்குள் தட்டில்

முறுக்கு வியாபாரிகள் கடைகள் யாரும் வைக்காததாலும் தட்டில் முறுக்கு விற்பனை இனத்திற்கு தொகை ஏதும் வசூலிக்க இயலாத காரணத்தினால் நிதியிழப்பு ஏற்பட்டதால் **31.03.2023** அன்று நகராட்சி வசம் ஒபப்படைக்கிறேன் என குத்தகைதாரர் விண்ணபத்தில் கோரியுள்ளார். எனவே, மேற்ப்படி குத்தகை இனத்தின் கேட்பை ரத்து செய்ய மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(4523/20/அ2)**

**தீர்மானம் எண். 407**

இராசிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தற்போது தட்டு, முறுக்கு தொழில் ஏதும் நடைபெறவில்லை. ஆகவே, இப்பொருளில் குறிப்பிட்டுள்ள குத்தகை இனத்தினை ரத்து செய்யலாம் என மன்றம் ஏகமனதாக தீர்மானித்து அனுமதிக்கப்படுகிறது.

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.